Paper ID: IDU13

# நபிகள் நாதர் பிள்ளைத்தமிழ் பிரபந்தத்தில் விரவியுள்ள பிள்ளைத்தமிழ் பிரபந்தத்திற்கான அடிப்படைப் பண்புகள்

**து. தீபா அர்ச்சனா**[1] **& ச. நிஷாந்தினி**[2]

[1]நான்காம் வருடம் இந்து நாகரிக (சிறப்புக் கற்கை)
[2]நான்காம் வருடம் தமிழ் (சிறப்புக் கற்கை)
nishaseu512@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ் மொழியில் உள்ள இலக்கியங்களை பேரிலக்கியம், சிற்றிலக்கியம் என வகைப்படுத்தலாம். ஒரு தலைவனின் முழு வாழ்க்கை வரலாற்றையும் கூறுவது பேரிலக்கியமாகும். சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம் போன்ற இலக்கியங்கள் பேரிலக்கியங்களாகும். உதயண குமார காவியம், நாககுமார காவியம், யசோதர காவியம், சூளாமணி, நீலகேசி என்பன சிற்றிலக்கியங்களாகும். அந்தவகையில் உலா, பள்ளு, தூது, பரணி, குறவஞ்சி, பிள்ளைத்தமிழ், காவடிசிந்து, அந்தாதி, கலம்பகம், என தமிழில் தொன்னூற்றியாறு வகையான சிற்றிலக்கியங்கள் உள்ளன. புலவர்கள் தாம் விரும்பிய தெய்வங்கள், இறையடியார்கள், வள்ளல்கள், அரசர்கள், ஆகியோரை குழந்தையாக உருவகித்து, அவர்களை பாட்டுடைத் தலைவர்களாகவோ தலைவியாகவோ பாவித்துப் போற்றிப் பத்துப் பருவங்களாக வகுத்துப் பாடும் சிற்றிலக்கிய வகையே பிள்ளைத்தமிழ் இலக்கியமாகும். அந்தவகையில் முகமது நபி அவர்களை பாட்டுடைத் தலைவராகக் கொண்டு அவரின் பெருமை கூறும் சிற்றிலக்கியமே மு. சண்முகம் என்பவரால் இயற்றப்பட்ட நபிகள் நாதர் பிள்ளைத் தமிழாகும். இஸ்லாமியத் தமிழ் சிற்றிலக்கியங்களில் நபிகள் நாதர் பிள்ளைத்தமிழ் இலக்கியம் குறித்து பரவலாக அறியப்படாத நிலையே காணப்படுகின்றது. அந்தவகையில் இவ்வாய்வின் நோக்கமாக, நபிகள் நாதர் பிள்ளைத்தமிழ் இலக்கியத்தில் பிள்ளைத்தமிழ் இலக்கியத்திற்கான பண்புகள் விரவியுள்ளதை அடையாளப்படுத்தலும் இஸ்லாமிய இலக்கியம் என்ற வகையில் நபிகள் நாதர் பிள்ளைத்தமிழ் இலக்கியத்திலே, பிள்ளைத்தமிழ் இலக்கியத்திற்கான பண்புகள் எடுத்துரைக்கப்படுவதனை தெளிவுப்படுத்தலும் அமைகின்றன. மு.சண்முகம் அவர்களின் நபிகள் நாதர் பிள்ளைத்தமிழ் பிரபந்த மூலமே ஆய்வின் எல்லையாகக் கொள்ளப்படுகின்றது. இவ்வாய்வானது பண்பு சார் ஆய்வாகும். ஆய்வின் நோக்கத்தை அடையும் பொருட்டு விவரண, ஒப்பியல் ஆய்வுமுறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்விற்காக முதலாம் நிலைத் தரவுகளாக மு.சண்முகம் அவர்களின் பிள்ளைத் தமிழ் இலக்கிய பிரபந்தப் பாடல்களும் இரண்டாம் நிலைத் தரவுகளாக பிள்ளைத்தமிழ் இலக்கியம் தொடர்பான நூல்கள், இவ்வாய்வுடன் தொடர்புடைய ஏனைய ஆய்வுக் கட்டுரைகள், இணையத்தள செய்திகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இறுதியாக இவ்வாய்வானது இஸ்லாமிய சிற்றிலக்கியங்களின் வளர்ச்சியில் சிறப்பானதொரு முயற்சியாக அமையும், நபிகள் நாதர் பிள்ளைத்தமிழ் பிரபந்தமானது பிள்ளைத்தமிழ் பிரபந்தத்தின் அடிப்படைப் பண்புகள் விரவியுள்ளதாக உரைக்கும்.

**திறவுச்சொற்கள்** - பிள்ளைத்தமிழ் இலக்கியம், நபிகள் நாதர் பிள்ளைத் தமிழ், நபிகள் நாயகம், பிரபந்தம்

## அறிமுகம்

தன்னிகரில்லா ஒரு தலைவனின் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு வகை உறுதிப் பொருட்களில் ஏதேனும் ஒன்றை அல்லது பலதை கூறுதல் சிற்றிலக்கியமாகும். சிற்றிலக்கியத்தை

வடமொழியில் ‘பிரபந்தம்’ என அழைப்பர். தமிழில் தொன்னூற்றியாறு வகையான சிற்றிலக்கியங்கள் உண்டு என கி. பி 16ஆம் நூற்றாண்டில் தோன்றிய பிரபந்த மரபியல் என்ற பாட்டியல் பின்வருமாறு கூறுகின்றது.

“பிள்ளைக் கவிமுதல் புராணம் ஈறாகத்

தொன்னூற் றாறு என்னும் தொகையது ஆம்”

பிள்ளைத்தமிழின் இலக்கணத்தை பாட்டியல் நூல்கள் விரிவான முறையில் கூறியுள்ளன. பன்னிரு பாட்டியல்,

“பிள்ளைப்பாட்டே தெள்ளிதின் கிளப்பின்

மூன்று முதலா மூவேழ் அளவும்

ஆன்ற திங்களின் அறைகுவர் நிலையே” எனக் குறிப்பிடுகின்றது.

பிள்ளைத்தமிழ் இலக்கியத்தை பிள்ளைப்பாட்டு, பிள்ளைக்கவி எனவும் அழைப்பர். இவையிரண்டும் ஒத்த பொருளுடையனவென்றாலும் நூல்களுக்குப் பெயரிடுகின்ற பொழுது தமிழ் மொழியின் பெயரையும் இணைத்துப் ‘பிள்ளைத்தமிழ்’ என்றுக் குறிப்பிடுதலே பெருவழக்காக காணப்படுகின்றது. பிள்ளைத்தமிழ் இலக்கியம் ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இருவகைப்படும். இந்திர காளியம் என்ற நூல்,


“தோற்றமுதல் யாண் டீரெட்டளவும்

ஆற்றல் சான்ற ஆண்பாற்குரிய” என ஆண்பாற் பிள்ளைத் தமிழிற்கும்,

“காப்பு முதலாகிய யாப்பு வகையெல்லாம்

பூப்பு நிகழ்வனவும் பெண்பாற்குரிய” எனப் பெண்பாற் பிள்ளைத் தமிழிற்கும் தனித் தனியே கால அளவை எடுத்துரைக்கிறது.

தமிழிலக்கிய வரலாற்றில் குறிப்பாக இஸ்லாமியத் தமிழிலக்கியமானது தனக்கென தனித்துவமானதொரு இடத்தை கொண்டுள்ளது. இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.



மேற்குறிப்பிடப்பட்ட இலக்கிய வகைப்பாட்டினுள் இஸ்லாமிய சிற்றிலக்கியங்களுள் உலா, ஆற்றுப்படை, கலம்பகம், கோவை, அந்தாதி, பிள்ளைத்தமிழ், அம்மானை, சதகம், தூது, மாலை, பள்ளு, அலங்காரம், ஆனந்தக்களிப்பு, ஒருபா ஒருப.ஃது, குறம், குறவஞ்சி, பாட்டு, பாவை, மஞ்சரி, மான்மியம், வண்ணம், வெண்பா, பதிகம் முதலான சிற்றிலக்கிய வகைகள் காணப்படுகின்றன. இத்தகைய சிற்றிலக்கிய வகைகளில் இஸ்லாமிய பிள்ளைத்தமிழ் இலக்கியம் குறித்து நோக்கும் போது இஸ்லாமிய புலவர்களால் மொத்தம் இருபத்தெட்டு பிள்ளைத்தமிழ் நூல்கள் பாடப்பட்டுள்ளன. அவற்றுள் அதிகமானவை ஆண்பாற் பிள்ளைத்தமிழ் இலக்கியங்களாகும். பாத்திமா நாயகி பிள்ளைத் தமிழ், ஆயிஷா நாச்சியார் பிள்ளைத் தமிழ் ஆகிய இரு இலக்கியங்கள் மாத்திரமே பெண்பாற் பிள்ளைத் தமிழ் இலக்கியங்களாக இயற்றப்பட்டுள்ளன. ஆண்பாற் பிள்ளைத்தமிழ் இலக்கியங்களில் நபிகள் நாயகம் அவர்களைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்ட நூல்களே அதிகமானவையாகும். அவற்றின் எண்ணிக்கை ஆறு.

**ஆய்வுப் பிரச்சினை**

இஸ்லாத்தை உலகறியச் செய்த இறைதூதர் நபிகள் நாயகத்தைச் சிறப்பித்துப் பெருங்காப்பியம் முதல் சிற்றிலக்கியம் வரை பல்வேறு இலக்கியங்கள் தோன்றியுள்ளன. இவ்விலக்கியங்களுள் பெருங்காப்பியங்கள் குறித்து பல்வேறு ஆய்வுகள் இடம்பெற்ற போதிலும் சிறுகாப்பியங்கள் பற்றிய ஆய்வுகள் அரிதாகவே இடம்பெற்றுள்ளன. தமிழ் சிற்றிலக்கிய மரபை பின்பற்றி எழுந்த இஸ்லாமிய சிற்றிலக்கியங்களும் அவற்றின் வடிவங்களும் சிறப்புக்களும் மக்களிடையே மிகுதியாக அறிமுகப்படுத்தப்படாமல் போற்றுவாரற்ற நிலையே காணப்படுகிறது. இதுவே ஆய்வின் பிரச்சினையாகும்.

**ஆய்வின் நோக்கம்**

இஸ்லாமியத் தமிழ் சிற்றிலக்கியங்களில் நபிகள் நாதர் பிள்ளைத்தமிழ் இலக்கியம் குறித்து பரவலாக அறியப்படாத நிலையே காணப்படுகின்றது. அந்தவகையில்,

1.நபிகள் நாதர் பிள்ளைத்தமிழ் இலக்கியத்தில் பிள்ளைத் தமிழ் இலக்கியத்திற்கான பண்புகள் விரவியுள்ளதை அடையாளப்படுத்தல்.

2.இஸ்லாமிய இலக்கியம் என்ற வகையில் நபிகள் நாதர் பிள்ளைத்தமிழ் இலக்கியத்திலே, பிள்ளைத்தமிழ் இலக்கியத்திற்கான பண்புகள் எடுத்துரைக்கப்படுவதனை தெளிவுப்படுத்தல்.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வானது பண்பு சார் ஆய்வாகும். ஆய்வின் நோக்கத்தை அடையும் பொருட்டு விவரண, ஒப்பியல் ஆய்வுமுறைகள் பயன்படுத்தப்படவுள்ளன. இவ்வாய்விற்காக முதலாம் நிலை, இரண்டாம் நிலை தரவுகள் பயன்படுத்தப்படவுள்ளன. முதலாம் நிலை தரவுகளாக மு.சண்முகம் அவர்களின் பிள்ளைத் தமிழ் இலக்கியமும் இரண்டாம் நிலைத் தரவுகளாக பிள்ளைத்தமிழ் இலக்கியம் தொடர்பான நூல்கள், இவ்வாய்வுடன் தொடர்புடைய ஏனைய ஆய்வுக் கட்டுரைகள், இணையத்தள செய்திகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**நபிகள் நாதர் பிள்ளைத் தமிழ் பிரபந்தத்தில் விரவியுள்ள பிள்ளைத்தமிழ் இலக்கியத்திற்கான அடிப்படைப் பண்புகள்**

**அ. தன்னிகரில்லாத் தலைவனை பாட்டுடைத் தலைவனாகக் கொள்ளுதல்.**

அன்பு செலுத்துவதற்கும் அன்பைப் பெறுவதற்கும் உரிய பருவம் குழந்தைப் பருவமே. புலவர்கள் தம் அன்பிற்குரிய ஒருவரை குழந்தையாக வைத்துப் பாடி அவர்தம் புகழை சிறப்பிக்கும் பண்பு பிள்ளைத்தமிழ் இலக்கியத்தில் காணப்படுகின்றது. புலவர் தம் அன்பிற்குரியவராக இறைவன், இறைவி, இறையடியார்கள், வள்ளல்கள், தலைவர்கள், அரசர்கள், ஆசிரியர்கள் ஆகியோருள் ஒருவரை தன்னிகரில்லா தலைவராகக் கொண்டு பிள்ளைத்தமிழ் பாடப்படும். அந்தவகையில் நபிகள் நாதர் பிள்ளைத்தமிழ் இலக்கியமானது இறைதூதரான நபிகள் நாயகத்தை தன்னிகரில்லாத் தலைவனாகக் கொண்டு இயற்றப்பட்டுள்ளது. அதை பின்வரும் பாடலடிகளில் அறியலாம்,

“மாதவத்தால் வந்துதித்த அப்துல்லா ஆமீனா

மகனாரைக் காத்து நலமாய்….”

“தூதர்நபி யானவரை வேதமறை சொன்னவரை

தூயோனே காத்தருளுவாய்….” (காப்புப் பருவம் : 1)

“வருவீர் வரிசை நபியரசே!

வல்லோன் ஈந்த பெரும் பரிசே!....” (முத்தப் பருவம் : 1)

இச்சிற்றிலக்கியத்தின் பாட்டுடைத் தலைவரான நபிகள் நாயகம் அவர்களின் பெருமைகளும் சாதனைகளும் சிறப்பான தன்மைகளும் அவரின் வழிகாட்டல்களும் அழகுற எடுத்தியம்பப்படுகின்றன. பின்வரும் பாடல்களில் அதனை காணலாம்,

“கலிமா தொழுகை நோன்போடு ஜக்காத்

ஹஜ்ஜொடு ஐந்தாகும்

கண்ணெனும் இஸ்லாம் கவின்மாளிகையைக்

கட்டிக் காத்தவரே”

“எழில்இறை க.ʹ.பா ஏற்றங் காண

என்றும் உழைத்தவரே…” (சப்பாணிப் பருவம் : 3) ஆகிய வரிகளில் நபிகள் நாயகரின் பெருமை கூறப்பட்டிருப்பதை காணலாம். மேலும்,

“பொறுமைக் கடலே! புகழ் முத்தே!...” (வருகைப் பருவம் : 2)

“வாழும் நெறியை உலகிற்கே

வாழ்ந்து காட்டி மெய்ப்பித்த வள்ளல்….” (தாலப் பருவம் : 10) ஆகிய வரிகளில் நபிகள் நாயகரின் சிறப்பான தன்மைகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

“மாதரார் தம்மைப் பேய்க்குலம் என்றே

மாற்றிப் பேசியதை

மாநபி யவர்தம் தூய்நெறி உரையால்

மடமை சாய்த்திட்டார்” (அம்புலிப் பருவம் : 9)

“புத்தியைப் புகட்டி புகுத்தினர் நேர்வழி

பூமான் எம் நபியாம்!

பூமியில் யாவரும் சோதர ரெண்ரே

புதுநெறி யுரைத்த வராம்!” (அம்புலிப் பருவம் : 10) ஆகிய வரிகளில் நபிகளின் வழிகாட்டல்கள் கூறப்பட்டுள்ளது. மேலும்,

“அருமை மார்க்கம் இசுலாத்தின்

அறத்தைக் காக்கப் பதுர்ப்போரில்

அளவிற் குறைந்த படைநடத்தி

அகிலம் வியக்க ஜெயம் கண்டீர்!” (வருகைப் பருவம் : 2) என நபிகளின் சாதனை குறித்துக் கூறப்பட்டுள்ளது.

**ஆ. நூற் பெயர் வைப்பு**

“முதனூல் கருத்தன அளவு மிகுதி

பொருள் செய்வித்தோன் தன்மை முதல் நிமித்தினும்

இடுகுறியாயினும் நூற்கெய்தும் பெயரே”

என பவணந்தி முனிவர் நூலுக்கு பெயர் அமையும் முறை பற்றி குறிப்பிடுகிறார். அதாவது, ஒரு நூலுக்கு அந்நூலின் முதல் நூலும், அந்நூல் செய்தவனும், அந்நூலின் அளவும், அந்நூலில் சொல்லப்படுவனவற்றுள் மிகுதியாகிய கூறும், அந்நூலிலே சொல்லப்பட்ட பொருளும், அந்நூல் செய்வோனிற்கு பொருளுதவி செய்து அதனை செய்வித்தவனும், அந்நூலின் குணமும், முதலாகிய காரணங்களாலும், இடுகுறியாலும் பெயர் வரும். அந்தவகையில் முதல் நூல், அந்நூலின் அளவு, அந்நூலின் மிகுதியாகிய கூறு போன்ற காரணங்களால் நபிகள் நாயகத்தை பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பிள்ளைத்தமிழ் இலக்கிய மரபைப் பின்பற்றி நபிகள் நாதர் பிள்ளைத்தமிழ் இலக்கியமானது இப்பெயரைப் பெற்று அமைந்துள்ளது.

**இ. பருவ அமைப்பு முறை**

பிள்ளைத்தமிழ் இலக்கியமானது இரு வகையாக அமையப் பெறுகிறது.

i. ஆண்பாற் பிள்ளைத்தமிழ்

ii. பெண்பாற் பிள்ளைத்தமிழ்

ஆண்பாற் பிள்ளைத்தமிழில் காப்புப் பருவம், செங்கீரைப் பருவம், தாலப் பருவம் சப்பாணிப்பருவம், முத்தப் பருவம், வருகைப் பருவம், அம்புலிப் பருவம், சிற்றில் பருவம், சிறுபறைப் பருவம், சிறுதேர்ப் பருவம் ஆகிய பத்துப் பருவங்கள் குறித்து பாடப்படுகிறது. இதனை வெண்பா பாட்டியல் நூற்பாவில் பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது.

“சாற்றிய காப்புத்தால் செங்கீரை சப்பாணி

மாற்றாரிய முத்தமே வாரானை – போற்றாரிய

அம்புலியே யாயித்த சிறுபறையே சிற்றிலே

பம்புசிறு தேரோடும் பத்து”

பெண்பாற் பிள்ளைத் தமிழில் காப்புப் பருவம், செங்கீரைப் பருவம், தாலப் பருவம், சப்பாணிப் பருவம், முத்தப் பருவம், வருகைப் பருவம், அம்புலிப் பருவம் ஆகியவற்றை பொதுவாகக் கொண்டு இறுதியாயுள்ள மூன்று பருவங்களுக்கு ஈடாகச் சிற்றில் இழைத்தல், சிறு சோறாக்கல், குழமகன், ஊசல், காமவேள் நோம்பு முதலியவற்றுள் மூன்றை பெற்றுவரும். ஆயினும் பெரும்பாலும் நீராட்டல் அல்லது கழங்கு, அம்மானை, ஊசல் எனும் பருவங்களே அதிகம் இடம்பெறுகின்றன. இதனை பன்னிரு பாட்டியல் பின்வருமாறு குறிப்பிடுகிறது.

“சிற்றில் இழைத்தல் சிறுசோறாக்கல்

பொற்பமர் குழமகன் புனைமணி ஊசல்

ஆண்டு ஈறாறதில் இழிற்காமன் நோன்போடு

வேண்டுதல் தானுள விளம்பினார் புலவர்” மேலும் இலக்கண விளக்க பாட்டியலானது,

“பின்னைய மூன்றும் பேதையர்க் காகா

ஆடுங் கழங்கு அம்மானை ஊசல்

பாடுங் கவியால் பகுத்து வகுப்புடன்

அகவல் விருத்தத் தாள் கிளையளவாம்”

என்று குறிப்பிடுகின்றது. இதனடிப்படையில் நோக்கும் போது நபிகள் நாதர் பிள்ளைத்தமிழ் இலக்கியமானது ஆண்பாற் பிள்ளைத்தமிழ் இலக்கியமாகும். இதற்கமைவாக இவ்விலக்கியத்தில் பின்வருமாறு பருவங்கள் அமையப் பெற்றுள்ளன.

- காப்புப் பருவம் (1-10 வரையான பாடல்கள்)
- செங்கீரைப் பருவம் (11-20 வரையான பாடல்கள்)
- தாலப் பருவம் (21-30 வரையான பாடல்கள்)
- சப்பாணிப் பருவம் (31-40 வரையான பாடல்கள்)
- முத்தப் பருவம் (41-50 வரையான பாடல்கள்)
- வருகைப் பருவம் (51-60 வரையான பாடல்கள்)
- அம்புலிப் பருவம் (61-70 வரையான பாடல்கள்)
- சிற்றில் பருவம் (71-80 வரையான பாடல்கள்)
- சிறுபறைப் பருவம் (81-90 வரையான பாடல்கள்)
- சிறுதேர்ப் பருவம் (91-100 வரையான பாடல்கள்)

**ஈ. பருவ விளக்க முறை**

பிள்ளைத்தமிழ் இலக்கியமானது பத்து பருவங்களைக் கொண்டு பாடப்படுகிறது. பிள்ளைத் தமிழ் மூன்றாம் திங்கள் முதல் இருபத்தோராம் திங்கள் வரை பாமாலைகளால் தொடுக்கப்படும். இம்முறை பின்வருமாறு அமைவதை காணலாம்.

- காப்புப் பருவம் - மூன்றாம் திங்கள்
- செங்கீரைப் பருவம் - ஐந்தாம் திங்கள்
- தாலப் பருவம் - ஏழாம் திங்கள்
- சப்பாணிப் பருவம் - ஒன்பதாம் திங்கள்
- முத்தப் பருவம் - பதினோராம் திங்கள்
- வருகைப் பருவம் - பதின் மூன்றாம் திங்கள்
- அம்புலிப் பருவம் - பதினைந்தாம் திங்கள்
- சிற்றில் பருவம்<br>(ஆண்பாற் பிள்ளைத் தமிழ்)<br>நீராட்டல் பருவம்<br>(பெண்பாற் பிள்ளைத்தமிழ்) - பதினேழாம் திங்கள்
- சிறுபறைப் பருவம்<br>(ஆண்பாற் பிள்ளைத் தமிழ்)<br>அம்மானை<br>(பெண்பாற் பிள்ளைத்தமிழ்) - பத்தொன்பதாம் திங்கள்
- சிறுதேர் பருவம்<br>(ஆண்பாற் பிள்ளைத் தமிழ்)<br>ஊசல்<br>(பெண்பாற் பிள்ளைத்தமிழ்) - இருபத்தோராம் திங்கள்

அந்த வகையில் ஆண்பாற் பிள்ளைத்தமிழாக அமைந்த நபிகள் நாதர் பிள்ளைத்தமிழ் இலக்கியமானது பின்வருமாறு பருவ அமைப்பைக் கொண்டுள்ளது.

- **காப்புப் பருவம்**

பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் முதற்பருவம் காப்புப் பருவமாகும். குழந்தைகள் நோயற்று வளம் பெற்று வாழ கடவுளை வேண்டுவதே காப்பாகத் திகழ்கிறது. இவ்வாறு குழந்தைகளின் குறை தீர்க்க எழுந்த காப்பே பிற்காலத்தில் எல்லா நிகழ்ச்சிகளுக்கும் இறைவனை காக்கும்படியாக வேண்டும் நிலை தோன்றியது. அம்முறைப்படியே பிள்ளைத்தமிழ் நூல்களிலும் காப்பு அமைகிறது.

"மூன்று முதலா மூவேழ் அளவும்
ஆன்ற திங்களின் அறைகுவர் நிலையே"

என்று பாட்டியல் குறிப்பிடுகிறது. அதாவது 'மூன்று முதலா' என்று கூறப்பட்டிருப்பதால் குழந்தையின் மூன்றாவது மாதம் தொடக்கம் முதலே பாட வேண்டும் என்பது தெளிவாகிறது. ஆகவே காப்பின் தொடக்கம் மூன்றாவது மாதமாகிறது.

கடவுளை பாட்டுடைத் தலைவராகக் கொண்ட நூல்களில் காப்புக்குரியவர் அவராக அமையும் போது அவரை விடுத்து வேறு கடவுளர்களைக் காக்கும்படியாக வேண்டுவது மரபாயிற்று. நபிகள் நாயகத்தை பாட்டுடைத் தலைவராகக் கொண்டு இயற்றப்பட்ட இந்நூலில் காப்புக்குரியவர் அவராகிவிட்டமையால் இஸ்லாமிய கொள்கைக்கேற்ப ஓர் இறைவனையே நபிகள் நாயகத்தைக் காக்கும்படி வேண்டியுள்ளார். அதை பின்வரும் பாடலில் அவதானிக்கலாம்,

"தூதர்நபி யானவரை வேதமறை சொன்னவரை

தூயோனே காத்தருளுவாய்

தொடுவானப் பிறையாகும் வடிவான நன்னபியை

துணைதந்து காத்த ருளவே"

- **செங்கீரைப் பருவம்**

பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் இரண்டாவது பருவமாகும். கீர் என்பதற்கு சொல்லெனப் பொருள் கொண்டு, பொருள் புரியாத ஒலியை எழுப்பும் பருவத்தையே இது குறிப்பதாக அமைகிறது. மேலும் குழந்தையானது ஒரு காலை உயர்த்தியும் ஒரு காலை மடக்கியும் இரு கைகளையும் நிலத்தில் ஊன்றி முகத்தை மேலே உயர்த்தி ஆடுகின்ற பருவமென்றும் கூறப்படுகிறது. அவ்வாறு ஆடும் பொழுது சுற்றத்தார் சிறந்த சொற்களை குழந்தை, மழலை மொழியில் கூற வேண்டும் என்று வேண்டுவர். இதன் அடிப்படையில் நபிகள் நாதர் பிள்ளைத்தமிழில் நபிகள் நாயகத்தினுடைய பெருமையும் புகழையும் சொல்லி செங்கீரை ஆடும்படி மு.சண்முகம் பாடுகின்றார்.

"பேறினுக் கெல்லாம் பெரும்பேறே!

பிணியணு காமல் காப்பீரே!

பேதமை யகற்றி பேரன்பாய்

ஆடுக செங்கோ செங்கீரை!"

- **தாலப்பருவம்**

இது பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் மூன்றாவது பருவமாகும். ‘தால்’ எனும் சொல் நாக்கு என்று பொருள்படும். நாக்கை அசைத்துத் தாலாட்டி குழந்தைகளைத் தூங்க வைப்பது இப்பருவமாகும். பிள்ளைத் தமிழ் இலக்கியத்தில் ஒரு பருவமாக விளங்கும் தாலாட்டு நாளடைவில் தனியொரு சிற்றிலக்கியமாக உருபெற்றுள்ளதை அவதானிக்கலாம்.

இப்பருவம் நபிகள் நாதர் பிள்ளைத்தமிழ் இலக்கியத்தில் குழந்தை விளையாடி படுத்துறங்கும் தொட்டிலையும் நபியினுடைய அழகையும் பெருமைகளையும் பலவாறு பாராட்டி தாலாட்டு பாடியிருப்பதை அவதானிக்க முடிகிறது.

“தாய்க்கும் மேலாய் பரிவூட்டும்

தாஹா நபியே! தாலேலோ!

தவழ்வீர் தங்கத் தொட்டிலிலே

துலைவா! தாலோ தாலேலோ!” (தொட்டில் பற்றியது)

“சிரிக்கும் அழகுச் சத்திரமே!

தேனே! பாலே! தாலேலோ!

திருமதீ னாவின் அழகொளியாய்

திகளும் நபியே! தாலேலோ!” (நபியின் அழகு பற்றியது)

- **சப்பாணிப் பருவம்**

இது பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் நான்காவது பருவமாகும். கள்ளமற்ற உள்ளங்கொண்ட குழந்தை ஒன்பதாவது மாதத்தில் உட்காரத் தொடங்கிய பிறகு மகிழ்ச்சியால் கைக்கொட்டுதல் போன்ற விளையாட்டுக்கள் இயல்பாகத் தோன்றும். பிறரை கைத்தட்டிக் காட்டி குழந்தையை அழைப்பதோடு குழந்தையையும் கைத்தட்ட வேண்டுவர். அதற்கேற்ப குழந்தையும் ‘சப்’ என்ற ஒலி உண்டாக்கும்படி பாணியை கொட்டி முழக்கும். இதுவே சப்பாணி பருவமாகும். இங்கு பாணியென கூறப்பட்டிருப்பது கையாகும். குழந்தை நிமிர்ந்து அமர்ந்திருக்கும் அமைப்பை சப்பாணி என்று கூறும் வழக்கம் உண்டு. அதனாலும் இப்பருவத்தை சப்பாணி பருவமென்று கூறுவர். மேலும், சக+பாணி= சப்பாணி. (சக=உடன், பாணி=கை) இரண்டு கைகளையும் உடன் சேர்த்து கொட்டுவதால் சப்பாணி ஆயிற்று என்றும், ‘ச’ என்றால் சேர்த்தல் என பொருள் கொண்டு கைகளைச் சேர்த்து ஒலியெழுப்புதல் எனவும் கூறப்படுகிறது.

இதனை நபிகள் நாதர் பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் ஊடாக அவதானிக்கும் போது பலமுறை மகுடமிட்டுச் சப்பாணிக் கொட்டுமாறு வேண்டுகின்ற போக்கை அவதானிக்க முடிகிறது.

‘‘எமதரும் நெஞ்சில் இன்னொளி பரப்பி

ஏற்றம் தருபவரே!

இந்நிலம் உய்ய இதமுடன் நீங்கள்

கோட்டுவீர் சப்பாணி''

- **முத்தப் பருவம்**

இது பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் ஐந்தாவது பருவமாகும். குழந்தையை பாராட்டி மடியில் தூக்கி வைத்துக் கொண்டு அதன் மலரினும் மெல்லிய இதழ்களால் முத்தம் பெற்று மகிழ்ச்சியடைதலே முத்தப்பருவமாகும். பாட்டுடைத் தலைவனை குழந்தையாக்கி அதன் முத்தத்திற்கு ஏங்கும் புலவர்களின் நிலையினை எல்லா பிள்ளைத் தமிழ் நூல்களிலும் காணலாம்.

நபிகள் நாதர் பிள்ளைத்தமிழில் இதனை நோக்கும் போது நபியை வாயால் முத்தமிட வேண்டிய புலவர்கள், நபியின் வாயை புகழ்ந்து பாடிய பொழுது அதனுடன் தொடர்புடைய உதடு, பல் போன்றவற்றின் சிறப்பையும், நபியின் பெருமையினையும் இணைத்தே பாடியுள்ளனர்.

“சித்தம் கனிய திருநபியே

செய்வீர முத்தம் மனமுவந்தே

சிவந்த இதழால் முத்திடுவீர்!

பெரும்பேறாகும் முத்திடுவீர்”

- **வருகைப் பருவம்**

இது பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் ஆறாவது பருவமாகும். இதனை ‘வாரானைப்பருவம்’ என்றும் கூறுவர். வரவேற்றல் என்பது தமிழர் பண்பாட்டில் தலைசிறந்த பண்பாகும். இப்பண்பின் அடிப்படையில் தோன்றியதே வருகைப்பருவமாகும். தத்தித் தத்தி தளர் நடையிட்டு வரும் குழந்தையை அருகில் வருக வருக என வாய்க்குளிர மனம் மகிழ அழைக்கும் பருவமே வாரானைப் பருவமாகும். குழந்தையை அவ்வாறு வரவேற்கும் பொழுது அதன் சிறப்புகளை எல்லாம் எடுத்துக்கூறுவர்.

அந்தவகையில் மு.சண்முகம் நபிகள் நாதர் பிள்ளைத்தமிழில் நபி நாயகத்தின் பிறப்பு, அவரது சிறப்பு, புகழ், சீர்திருத்தச் செயல்கள் ஆகியவற்றைக் குறிப்பிட்டு வருக வருக என நபியை அழைக்கும் போக்கை காணமுடிகிறது.

“போதரின் பிறப்பால் பூமியில் நல்ல

புண்ணியம் தழைத்ததுவே!

பொய்வழிக் கொள்கைகள் மெய்நெறிச் சுடரால்

புகைந்து கருகினவே!

நீதராம் எங்கள் நேயல் நபியே!

நெஞ்சம் களித்திடவே

நித்தில ஒளியாய் முத்திரைப் பொன்னாய்

நபியே வந்தருள்வீர்!"

- **அம்புலிப் பருவம்**

பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் ஏழாவது பருவமாகும். அம்புலி என்பது சந்திரனைக் குறிக்கும். வானிலுள்ள சந்திரனை விளையாட வருமாறு அழைக்கும் பருவமே இதுவாகும். தளர் நடையிட்டு வரும் குழந்தை அங்குமிங்குமாகச் சென்று காட்சிகளைப் பார்ப்பதற்கு விரும்பும். அப்போது நிலவொளியில் குழந்தை நடந்து வந்தால் சந்திரனும் குழந்தையுடன் வருவது போன்று காட்சியளிக்கும். அப்படி வருகின்ற நிலவை குழந்தையுடன் விளையாட அழைக்கும் பருவமே அம்புலிப்பருவமாகும்.

அம்புலிப்பருவம் பாடுகிற பொழுது சந்திரனை குழந்தையுடன் விளையாட அழைக்க சாம, பேத, தான, தண்டம் எனும் நான்கு உபாயங்களையும் கையாண்டு பாடல் இயற்றுதல் மரபாகும். இவற்றுள் சாமம் என்பது இன்னென்ன காரணங்களால் அம்புலியை சமமெனக் கருதி விளையாட வா என அழைப்பதாகும். பேதம் என்பது இன்னென்ன காரணங்களால் நீயும் அவரும் வேறுபடுகிறீர்கள் என்றாலும் அம்புலியை விளையாட அழைப்பதாகும். தானம் என்பது நீ இவனுடன் விளையாட வந்தால் இன்னென்ன நன்மைகள் கிடைக்கும் எனக் கூறி அழைப்பதாகும். தண்டம் என்பது இப்படியெல்லாம் அழைத்தும் நீ இவனுடன் விளையாடவரவில்லை என்றால் இன்னென்ன தன்டணைகளை பெறுவாய் என அழைப்பதாகும். இம்மரபினை நபிகள் நாயகம் பிள்ளைத்தமிழ் இலக்கியம் சிறப்பாகக் குறிப்பிடுகிறது. அவற்றுள் பேத உபாயமானது பின்வருமாறு அமைகிறது.

"வானத்தில் நீயென்ன? இரவாட்சி புரிகின்ற

வுகை சேர்ந்த அரசாகலாம்

வருஷத்தில் பாதிதான் உன்னாட்சி; அதற்குள்ளே

வாடியே நீ தேயலாம்!

தேனொத்த மொழியாளர் நபிகளார் பலகோடி

சிந்தைக்கு மரசராமே

தேய்கின்ற தில்லையவர்; தாயன்புப் பெட்டகம்!

தேர்ந்தறி வாளரன்றே"

- **சிற்றில் பருவம்**

ஆண்பாற் பிள்ளைத் தமிழ் இலக்கியத்தின் எட்டாவது பருவமாகும். வெண்மணலில் சிற்றில் அமைத்து விளையாடும் சிறுமியின் சிற்றிலை அழிக்க முற்படும் போது "சிறுமியின் சிற்றிலை சிதையேன்" என வேண்டுவதாக இப்பருவம் அமையும். அம்புலிப் பருவத்தில் அம்புலியை தன்னுடன் விளையாட அழைத்தும் வராததனால் கோபம் கொண்ட பாட்டுடைத் தலைவன் சிறுமியர் மணலில் இழைத்து விளையாடும் வீட்டை சிதைக்கின்றான். இங்கு புலவர்கள் தம்மை மணல் வீடு கட்டி விளையாடும் சிறுமியர்களாக பாவித்து பாடுகின்றனர். முந்தைய அனைத்து பருவங்களும்

குழந்தையின் பெற்றோரும் மற்றோரும் பாடுவதாக அமைய இப்பருவம் மட்டும் சிறுமிகள் பாடுவதாக அமைகிறது. இப்பருவத்தினை சிற்றில் இழைத்தல், சிற்றில் சிதைத்தல் பருவம் எனவும் கூறுவர்.

இத்தன்மைகளை நபிகள் நாதர் பிள்ளைத்தமிழ் இலக்கியம் மூலமாக எடுத்துரைக்க முற்பட்ட புலவர்கள் நபிகள் நாயகத்தின் குணங்களை, கொள்கைகளை, எளிய வாழ்வைச் சுட்டி ‘பெருமைக்குரியவரே எம் சிற்றிலை சிதையிர்’ என வேண்டுவதாக பாடல்களை பாடியுள்ளனர்.

“நல்லார் எங்கள் நபித்தூதே!

நலிந்தவர்க் கென்றும் உறுதுணையே!

நாயகம் சிற்றில் சிதைக்காதீர்!

நன்னபி சிற்றில் சிதைக்காதீர்!”

- **சிறுபறைப் பருவம்**

ஆண்பாற் பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் ஒன்பதாவது பருவமாகும். பறை என்பது ஒரு இசைக்கருவி. இக்கருவியை குழந்தையின் கையில் கொடுத்து முழக்குமாறு வேண்டுவது சிறுபறைப் பருவமாகும். இப்பருவத்தின் பாடல்கள் அதிகமாக சமயக் கொள்கையை விளக்கும் வகையிலேயே அமைந்துள்ளது. குழந்தையைச் சமய நெறி பரப்ப பறையை வேண்டுவதாக அமைந்துள்ளது.

இந்நிலையானது நபிகள் நாயகம் இறைவனிடமிருந்து வேதத்தை பெற்று வழங்கியமை, சாதி சமய வேறுபாடுகளை நீக்கியமை, இஸ்லாத்தை வளர்த்தமை, அரசனும் ஆண்டியும் தொழுகையில் சமம் என்று கூறியமை, அனாதைகளை ஆதரித்தமை போன்ற நபியின் சீர்திருத்தக் கருத்துக்கள் நபிகள் நாதர் பிள்ளைத்தமிழ் இலக்கியத்தினூடாக எடுத்துரைக்கப்படுகிறது.

“எங்கணும் ஒற்றுமை, எல்லாம் ஓர் குலம்!

இசுலாம் வழியாகும்! -இதை

எம்மதத் தவரும் சம்மதித் தாலே

இன்பம் உருவாகும்!- நற்

சேங்கரும் பாக உள்ளம் இனித்திடச்

சிறுபறை முழக்கிடுவீர்! – புது…”

- **சிறுதேர் பருவம்**

ஆண்பாற் பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் பத்தாவது பருவமாகும். மரத்தாலான சிறிய தேரினை உருட்டி மகிழும்படி குழந்தையை வேண்டி பாடுவது இப்பருவமாகும். இப்பருவ பாடலின் இறுதியில் மங்கலம் பாடப்படும். அதாவது நபி தோழர்கள், அறிஞர்கள் மற்றும் அனைவரையும் வாழ்த்தி இஸ்லாமிய நெறிப்படி உலகத்தார் நடப்பார்களாக எனவும், அனைவரையும் எத்துன்பமும் இன்றி வாழ தீமைகள் அனைத்தும் நீங்கிவிட வாழ்த்துவது சிறப்பாக அமைகிறது. இவ்வமைப்பானது

நபியின் சீர்திருத்தக் கருத்துக்களையும் வரலாற்று நிகழ்ச்சிகளையும் கூறி தேருருட்ட வேண்டுவதாக நபிகள் நாதர் பிள்ளைத்தமிழில் பாடல்கள் அமையப்பெறுகிறது.

"நன்னபி நீங்கள் சிறுதே ரோட்டி

நகரும் பாதையெலாம்

நன்மைகள் விரியும்; ஏழையர் நெஞ்சில்

நலமே தான் நிறையும்"

மேற்கூறப்பட்ட வகையிலேயே நபிகள் நாதர் பிள்ளைத்தமிழ் இலக்கியமானது பருவ விளக்க முறையைக் கொண்டு அமைகிறது.

**உ. யாப்பமைதி**

பிள்ளைத் தமிழ் இலக்கியங்கள் பெரும்பாலும் ஆசிரிய விருத்தத்திலேயே அமையப்பெற்றுள்ளன. ஆசிரிய விருத்தம் என்பது ஆசிரியப்பாவிற்குரிய ஓசை, தொடை முதலியன ஒருங்கே பெற்று நான்கு அடிகளுக்கு மிகாமலும் ஓரடியில் எத்தனை சீர்கள் வேண்டுமானாலும் கொண்டிருப்பதாகும். பிற அடிகளும் முதலடியில் வந்த சீர்களின் எண்ணிக்கையினையே பெற வேண்டும். பிள்ளைத்தமிழுக்குரிய யாப்பு ஆசிரிய விருத்தம் என்பதை சுவாமி நாதமும், இலக்கண விளக்கப் பாட்டியலும் குறிப்பிடுகின்றது.

மேலும் பன்னிரு பாட்டியல் பிள்ளைத்தமிழ் இலக்கியமானது ஆசிரிய விருத்தம், கட்டளைக் கலிப்பா, கலிவிருத்தம் ஆகிய யாப்புகளிலும் அமையலாம் எனக் கூறுகின்றது. ஆனால் பிள்ளைத்தமிழ் இலக்கியங்கள் பெரும்பாலும் ஆசிரிய விருத்தத்திலேயே பாடப் பெற்றுள்ளன. இந்த அடிப்படையிலேயே நபிகள் நாயகம் பிள்ளைத்தமிழ் இலக்கியமானது ஆசிரிய விருத்தத்திலேயே அமையப் பெற்றுள்ளமையை அதானிக்கலாம்.

**ஊ. பதிக அமைப்பு**

பொதுவாக பிள்ளைத் தமிழ் இலக்கியங்கள் ஒவ்வொரு பருவத்திலும் பத்துப் பாடல்கள் என்ற எண்ணிக்கையின் அடிப்படையில் அமையப்பெறும். இந்த அடிப்படையில் நபிகள் நாயகம்பிள்ளைத் தமிழ் இலக்கியமானது ஆண்பாற் பிள்ளைத்தமிழ் இலக்கியமாதலால் காப்பு பருவம் முதல் சிறுதேர் பருவம் வரை ஒவ்வொரு பருவத்திலும் பத்து பத்து பாடல்களாக நூறுப் பாடல்கள் பாடப்பட்டுள்ளன.

இவ்வாறான வகையில் நபிகள் நாதர் பிள்ளைத்தமிழில், பிள்ளைத்தமிழ் பிரபந்தத்திற்கான அடிப்படை அம்சங்கள் விரவியுள்ளதை காணலாம்.

**முடிவும் தொகுப்புரையும்**

பிற சமயத்தினரைப் போல இஸ்லாமியர்களும் தமிழில் இலக்கியம் படைக்கும் நோக்கோடும், தமது சமயக் கருத்துக்களை புலப்படுத்தும் நோக்கோடும் செயற்பட்டனர். இவர்களுக்கு மத்தியில் மு. சண்முகம் இந்து சமயப் புலவராக இருந்தாலும் இஸ்லாமிய நெறிகளை, நபியின் வாழ்க்கை முறையினை நன்குணர்ந்து இஸ்லாமிய இலக்கியத்திற்கான தமது பங்களிப்பை வழங்கியுள்ளமையை

சிறப்பான விடயமாகக் குறிப்பிடலாம். இஸ்லாமிய தமிழ் இலக்கியங்களுள் குறிப்பாக சிற்றிலக்கியங்கள் அளவில் குறைவாகவே தோற்றம் பெற்றுள்ளன. இத்தகைய இலக்கியங்கள் சிற்றிலக்கிய மரபினை பாதுகாக்க எழுந்தவை எனவும் குறிப்பிடலாம்.

சிற்றிலக்கிய வகைகள் ஒன்றான பிள்ளைத் தமிழ் இலக்கிய மரபினை பின்பற்றி நபிகள் நாயகம் பிள்ளைத் தமிழ் பிரபந்தங்கள் ஆறு புலவர்களால் பாடப்பட்டுள்ளன. இவற்றுள் இஸ்லாமிய புலவர்கள் பருவ அமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தி தமது பிள்ளைத் தமிழ் இலக்கியங்களை படைத்த போதும் மு.சண்முகம் பருவ அமைப்பில் எவ்வித மாற்றங்களையும் நிகழ்த்தாமல் பிள்ளைத் தமிழ் பிரபந்தத்தின் பிரதான பண்புகள் விரவிய வண்ணம் நபிகள் நாதர் பிள்ளைத் தமிழை பாடியுள்ளார்.

உசாத்துணைகள்


01. இரகுநாதன், ம. (2006). தமிழ்ப்பா வடிவங்களை விளங்கிக் கொள்ளல். யாழ்ப்பாணம், இலங்கை: எயில் பதிப்பகம்.
02. சங்கரலிங்கம், ப. (1998). இலக்கிய வரலாறு. சென்னை, இந்தியா: மணிவாசகர் பதிப்பகம்.
03. சண்முகம், மு. (1978). நபிகள் நாதர் பிள்ளைத்தமிழ். சென்னை, இந்தியா: நாச்சிக்குளத்தார் பதிப்பகம்.
04. பாத்திமா பீ, சை. (1990). நபிகள் நாயகம் பிள்ளைத்தமிழ் - ஓர் ஆய்வு. சென்னை, இந்தியா: ஆமினா வெளியீடு.
05. முகம்மது உவைஸ், ம., அச்மல் கான், பீ. மு. (1986). இஸ்லாமிய தமிழிலக்கிய வரலாறு தொகுதி 1- தொடக்கக் காலம். சென்னை, இந்தியா: மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.
06. முத்தமிழ்ச் செல்வன், (2006). தமிழிலக்கிய வரலாறு. சென்னை, இந்தியா: இராமநாதன் பதிப்பகம்.
07. பிள்ளைத்தமிழ்.(பருவங்கள்).(வியாழக்கிழமை,ஜனவரி13,2011). https://www.gunathamizh.com
08. பிள்ளைத்தமிழ்.(டிசம்பர் 27,2014). https://www.siraghu.com
09. சிற்றிலக்கியங்கள்-பிள்ளைத்தமிழ்(n.d.). https://www.tnpscwinners.com